
# சிந்தியுங்கள்! சிறகடியுங்கள்!



முதுமுனைவர்
இரா. இளங்குமரனார்

# சிந்தியுங்கள்! சிறகடியுங்கள்!

முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

திருவள்ளுவர் நிலையம்
7, இராமன் தெரு, திருநகர்,
மதுரை - 625 006

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | சிந்தியுங்கள்! சிறகடியுங்கள்! |
| பொருள் | | மெய்யியல் |
| ஆசிரியர் | : | இரா. இளங்குமரனார். |
| முதற் பதிப்பு | : | தி. பி. 2049 கி. பி. 2018. |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாள் | | 13. 7 வெள்ளைத் தாள் |
| அளவு | | 1/8 |
| பக்கம் | | iv + 28 = 32 |
| படிகள் | : | 500 |
| விலை | : | உருவா. 20/- |
| நூலாக்கம் | | தி பிரிண்டிங்கு அவுசு<br>திருச்சிராப்பள்ளி - 23.<br>0431 - 2420121 |
| வெளியீடு | | திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006. |
| நூல் கிடைக்கும் இடங்கள் | | ஆசிரியர்<br>2 பிச்சையம்மாள் நகர்,<br>காசாமலை, திருச்சி - 23.<br>9940704702 |

❖❖❖❖

# விண்ணில் பறக்கும் விழுமியங்கள்

இது பொழுது போக்கு நூலன்று!
அறிவுக்குப் படிக்கும் நூல் மட்டுமன்று!
ஆழமாய்க் கற்றுக் கடைப்பிடிக்க
எழுதப்பட்ட சுவடி!
பற்று, பற்று அறல், பற்றத்தக்கார், பற்றற்பயன்
என்பவற்றை ஆழப்பதியச் செய்யும் சுவடி!
ஏழு கட்டுரைகளை உடையது!
ஒருமுறை படித்தால் போதாது!
போதும் என்னும் நிலையர் தாமும் உண்டு!
அவர் இந்நிலையைப் புரிந்து கொண்டவர்.
பிறர் புரியவும் செய்ய வல்லார்!
பற்ற விரும்புவார் - பற்றறுப்பார் - பற்றற்றபயன்
காண விரும்புவார் - ஊடு ஊடு எடுத்துப்படிக்க
வேண்டும் சுவடி இது!
அச்சப்படுத்துவது அன்று இது! ஆழ அகலப் படுத்தி
ஆள வைக்க எழுதுவது!
மண்ணில் நடந்ததை மாற்றி விண்ணில் பறக்க ஏவும்
விழுமியம் உடையது!
துறவு நூல் அன்று! உறவு நூல் இது!

இதற்கு மெய்ப்பு முதல் அனைத்துப் பொறுப்பும் ஏற்ற அருமை முனைவர் பி. தமிழகனாருக்கும், இச்சுவடிக்காம் செலவை ஏற்றுக் கொண்ட நெய்வேலி திருத்தகு. தமிழ்நன்மதி அவர்களின் குடும்பத்தவர்க்கும் நன்றி பெரிதுடையேன்.

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

# உள்ளுறை

பக்கம்


| | |
|---|---|
| விண்ணில் பறக்கும் விழுமியங்கள் | iii |
| 1. சிந்தியுங்கள்! சிறகடியுங்கள்! | 1 |
| 2. பற்றுவது எப்படி? | 6 |
| 3. பற்றுவது எதை? எவரை? | 10 |
| 4. பற்றுவது எதற்காக? | 14 |
| 5. பற்றுவதால் பயன் என்ன? | 17 |
| 6. பற்றுதல் பயன் முழுதுறும் வீடுபேறே! | 22 |
| 7. பேரா இயற்கைப் பேறு | 26 |


❖❖❖

# நூல்

## 1. சிந்தியுங்கள்! சிறகடியுங்கள்!

சிந்திக்கப் பிறந்த பிறவி, மாந்தப் பிறவி,

சிந்திக்காப் பிறவி மக்கள் பிறவி அன்று.

அப்பிறவி, மாக்கள் பிறவி!

மாவும் (விலங்கும், சிந்திக்காத மனிதரும்) மாக்களும்

ஐயறி வினவே!

சிந்திக்க வாய்த்த பொறி மனம். மனம் ஆறாம் அறிவுக்குரிய நுண் உறுப்பு.

ஆறாம் அறிவே, ஐந்தறிவு உயிரிகளை வெல்ல வாய்த்த அறிவாயிற்று.

அவ், வாறாம் அறிவு தன் ஐந்தறிவுகளையும் வென்றோங்க வேண்டும்.

ஆறாம் அறிவு இருந்தும், தன்னை வெல்லாப் பிறவி இழிபிறவி.

ஆறாம் அறிவு இருந்தும், தன்னை அவ்வாறாம் அறிவில் இருந்து கீழே இறக்கி மக்கள் பிறவியை மாக்கள் பிறவி ஆக்குவது இழி பிறவி!

தன்னை வெல்லாதான், ஆறறிவுப் பிறவி அல்லாதான்.

மெய் வாய் கண் மூக்கு செவி - ஐம் பொறி.

ஊறு சுவை ஒளி மணம் ஒலி - ஐம் புலன்.

ஐம் புலனையும் வென்றான் அறிவன்.

ஐம் புலனையும் ஆறாம் அறிவாம்

மன அறிவால் வெற்றி கொண்ட விழுமியன் வீரன்.

"புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரமாம்"

ஆறாம் பொறியாம் மனம் அமைந்ததன் அடையாளம்,

பிறரை வெல்லுதற்கு அன்று! தன்னை

வெல்லுதற்கே அமைந்தது அது!

ஆறாம் அறிவால் தன்னை வெல்லுவதை விட்டு

மற்றை ஆறாம் அறிவினரையும்

மற்றை மற்றை ஐந்தறிவுயிரிகளையும்

வெல்லும் வெற்றி வெற்றி அன்று!

வெறி அது! அதுவே செருக்கு! அதுவே,

ஆணவம்! அதுவே, ஆன்மநேய அழிவு!

ஆறாம் அறிவன் சிந்தனையாளன்!

**அவன் சிந்தனை முதற்கண் அவனைச் சிந்திப்பது.**

தன்னைச் சிந்தியாப் பிறவி சிந்தனைப் பிறவியாகவோ

சிந்தனை யாளியாகவோ ஆக முடியாது!

அதனால், "சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்"

என்னும் ஐந்தன் வகையறிவான் சிந்தனையாளன்

தற்சிந்தனையாளன்; அவனே ஐந்தவித்தான்'

அவன் மண்ணவன் எனினும், விண்ணவன்.

மீமாந்தன் - நிலையன்! அந்நிலை மேம்பட

மேம்பட, ஏழாம் அறிவாம் **உயிரொப்பு நிலையுணர்**

**அறிவும்**, அதன் மேலாம் **அவ்வுயிரியே என்னுயிரி**

என்னும் **எட்டாம் அறிவும்** பெருகிய **மீமிசை மாந்தன்.**

தற்சிந்தனையால் எட்டாம் அறிவாம் மீமிசை

நிலையை அடைதலே ஏறாத மேட்டில் - ஏறரிய

மலைமுடிமேல் - ஏறிய நிலை!

'ஏறாதநிலையில் ஏறினேன்'' என்னும் **வள்ளலார்** நிலை!

"எல்லா உயிரிகளும் இன்புற்றிருக்க வேண்டும்'' என்னும் **தாயுமானாரியல்.**

சிந்தனையாளன், கண்மூடி அமைந்து கிடப்பான். எனினும் அவன் உலகமாக இருப்பான்! உலகம் அவனாக இருக்கும்.

சிந்தனையாளன் கால்களால் நடப்பவன் தான்!

ஆனால் அவன் மனச்சிறகால் மண்ணுலகப் பரப்பெல்லாம் பரப்பான்!

நீரகப் பரப்பின் உள்ளெல்லாம் ஆழ்ந்து புகுவான்!

விண்ணகப் பரப்பெல்லாம் விரவி விரிவான்!

அவன் உள்ளம் இம்மூன்றினும் ('மண் நீர் விண்') விரிந்தது. இவற்றை உள்ளடக்கியது.

அவன் சிந்தனைக் கூட்டுக்குள் அனைத்து அண்டங்களும், அனைத்து வெளிகளும், அனைத்து நிலநீர்ப் பரப்புகளும் ஒடுங்கிக் கிடக்கச் செய்யும்.

**ஒடுங்கி நிலையன்** அவன்!

அன்பெனும் பிடியுள் அகப்படச் செய்வான், மலையையும்!

அன்பெனும் குடிலுள் புகுந்துவிடும் ஆணையன் ஆவான்!

அவன் கூடு விட்டுக் கூடுபாயும்,

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?'' என்னும் நிலையன்!

அருளாம் குழந்தையைப் பெற்ற தாயானவனும் அவன்!

அங்கே ஆணில்லை! பெண்ணில்லை!

அலியில்லை! தானில்லை! தனக்கெனலில்லை!

இருப்பது எல்லாம் ஒன்றே ஒன்று.

'உலகம் என்னுயிர்' என்னும் இரக்கம்!

அந்த **"இரக்கம் என்னை விட்டு நீங்கின் என்னுயிர் என்னை விட்டு நீங்கும்"** என்னும் **வள்ளலாரியம்!** ஒடுங்கியாம் நிலை கொண்டவன் ஒப்பிலான்; உத்தமன்!

அவன் நடுங்கான்! நமனுக்கு அஞ்சான்!

ஒடுங்கியாவான், ஒடுக்க எண்ணான்! உயிர்கள் தன்னுள் ஒடுங்கியாக, ஒரு பேரொளிப் பிழம்பாகத் திகழ்வான்!

அவனுக்கு இரவும் இல்லை! பகலும் இல்லை! இன்பமும் இல்லை! துன்பமும் இல்லை!

**நிலையில் திரியா மலையாய் - மலையினும்**

**மாணப் பெரியனாம் நிலையாய் இருப்பவனுக்கு**

**அசைவேது? ஆட்டமேது? ஆணையும் தான் ஏது?**

**அவன் நிலை, அசையா நிலை - ஆடாநிலை - திரியாநிலை - அவன் கொண்டது பேரா இயற்கை!**

ஆரா இயற்கை அவா இல்லான், எவன்?

அவன் பேரா இயற்கையன்! பேரா இயற்கையன்,

பேசுவன எல்லாம் பேசினான்! நடப்பன எல்லாம்

நடந்தான்! காட்டுவன எல்லாம் காட்டினான்!

இனி அவன் பேச - நடக்க - காட்ட வேண்டிய

நிலை இல்லாமல் எல்லாவற்றையும் இல்லாமல்

இருக்க வேண்டிய நிலையை, இருந்தபடி இருந்து

காட்டும் நிலையன் ஆய்விட்டான்!

இனி, அவன் இறை நிலையன்! நிறை நிலையன்!

குறை நிலையன், நிறை நிலைக்கு வழிகாட்டி ஆகான்

குறை நிலையன், நிறை நிலையை அடையாமல்
நிறை நிலையன் ஆகான்!
குறை நிலையன் என்ன கோலத்தால்
மறைந்தாலும் - என்ன பரப்பலால் பளிச்சிட்டாலும் -
பொய்ம்மைப் போலியர் போலிப் புகழ்ச்சிக்கு
ஆட்பட்டாலும், அவன் போலிமுகம் - குறை நிலை -
கூடா ஒழுக்கம் பொள்ளெனப் - பொய்யெனப் -
புலப்பட்டு விடும்!
செம்பை எத்தனை எத்தனை முறை புளியால்
தேய்த்தாலும் - மெருகு ஏற்றினாலும் -
அதன் களிம்பு அகலாது!
ஆணிப்பொன் தோற்றம் தந்தாலும்,
ஆணிப்பொன் ஆகாது!
செம்பில் களிம்பு பிறப்பொடு வந்தது; இறப்புவரை -
அழிந்து போம் வரை அழியாமல் இருந்து, அச்
செம்போடே அழிந்து போவதன்றித் தானே அழிந்து போகாதது.
பொன்னும் பொலிவொடு பிறந்தது; பொலிவொடும்
இருந்தது; பொலிவு மாறிப் போகவே போகாதது
பொன், செம்பாக ஒருநாளும் ஆகாது!

ஆதலால், சிந்தித்துச் சிறகடிக்க எண்ணுவார், **களிம்பனைப் பற்றாமல் பொன்னனைப் பற்றுதல் முதற்படி.**

❖❖❖

# 2. பற்றுவது எப்படி?

பூனை குட்டி போடுகிறது!

நாயும் குட்டி போடுகிறது!

புலியும் குட்டி போடுகிறது!

போட்ட குட்டிக்கு நடைத்திறம் வரவில்லை! அவற்றைக் காப்பான ஓரிடத்தில் சேர்க்க வேண்டும்.

பூனையும் நாயும் புலியும் தம் குட்டிகளை எப்படிக் கொண்டு செல்கின்றன?

பல்லால் கௌவித் தூக்கிக் கொண்டு போகின்றன. பல்லால் கௌவுதல் 'பற்று' **பல் + து = பற்று.**

தன்குட்டியைப் பற்றும் பல்லின் பண்பாம் மெல்லியல் - நல்லியல் - வேறு!

அதற்கு எதிராக எலியை - முயலை - மானை அவை பற்றும் நிலை, பற்றுடைய பற்று நிலையா? வல்லியல் - கொல்லியல் - இல்லையா?

பற்றில் குடி தாங்கு பற்றும் உண்டு!

பற்றில் குடி கொல்லும் பற்றும் உண்டு!

பற்று என்றால் எல்லாமும் நற்பற்றா?

எல்லாமும் அற்பற்றா?

பற்றும் உள்ளத்தில் உள்ளதும் இல்லதுமாம் நல் - அல் - பற்றுகளே இவை! பூனை நாய் புலி ஆயவற்றின் பற்றுதல் அவற்றின் உயிர்க்காவல் உணவுக்காம் பற்றுதல்! மாந்தர்க்கு?

எதைப் பற்ற வேண்டும், எப்படிப் பற்ற வேண்டும், ஏன் பற்ற வேண்டும் என்பதற்காகப் 'பற்றி' என்றோர், நறுமணக் குச்சியை உருவாக்கினர், எடுத்துக்காட்டாக!

குச்சியில் பற்று மருந்து; தீப்பெட்டியில் பற்று மருந்து; பற்றியிலும் பற்று மருந்து - எனச் செய்பொருளாய்ப் பற்று ஆகின்றது. தீக்குச்சியை உராய்ந்தால் தீப்பற்றுகிறது! பற்றிய தீயைப் பற்றியில் வைத்தால் அங்கேயும் தீப்பற்றுகிறது!

பற்றிய தீயை அணைத்தால் நெடுநேரம் அப்பற்று மணம் பரப்பி மெல்ல மெல்லக் குறைகின்றது. பற்றிய மருந்துப் பகுதி அழிந்ததும் - பற்று அற்றதும் - தீக்கங்கும் அழிந்து போகின்றது. "அற்றது பற்றெனில் உற்றது வீடு"

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு"**

என்பனவற்றின் விளக்கம் 'பற்றி'ச் செய்பொருள் ஆகியது. அதனைப் 'பத்தி' என்றமை அதன் பொருள் உணராவகையில் அமைந்து ஒரு சடங்காகிப் போனது. மருத்துவர் இன்னநோய் உங்களுக்கு உள்ளது. இன்ன இன்னவற்றை உண்ணல் ஆகாது. உண்டால் உயிர்க்கேடு! என்கிறார்.

அவர் சொல்லியவற்றை மீறாமல் மாறாமல் பற்றிக் கொள்ள வேண்டும். ஆதலால் **'பற்றியம்'** எனப்பட்டது. அதுவும் பத்தியமாகிப் பொருள் இழந்து போதலாயது.

பற்றிப் பிடிக்கும் கருவி **பற்றுக் குறடு!** பற்றுள்ள சுற்றம் பற்றாயம்! எலி முதலியவற்றைப் பிடிக்கப் பொறிகள் இருந்தன. அவை எலிப்பொறி, பன்றிப்பொறி, கல்லடார் என்பன. மக்கள் வழக்கில் எலிப்பொறி 'எலிப்பத்தியம்' ஆயது. கிணற்றுப்பற்று, குளத்துப்பற்று, ஈயப்பற்று, பற்றுப் போடல், பற்றுச்சுவர், பற்றாசு என்பனவெல்லாம் பத்தாக மாறியும் சில மாறாமலும் உள்ளன.

வாழ்வியல் சிறக்கப் பற்ற வேண்டுவனவும் உண்டு. பற்ற வேண்டாதனவும் உண்டு. நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, வீட்டுப்பற்று, நட்புப்பற்று என்பனவெல்லாம் பற்று வகைகளே!

பற்ற வேண்டியவற்றைப் பற்றாமல் விடுதல் கேடு! பற்ற வேண்டாதவற்றைப் பற்றுதலும் கேடு! பற்ற வேண்டுவ பற்றாமல், பற்ற வேண்டாதனபற்றல் இருமடங்குக் கேடு! நல்லவற்றைப் பற்றப் பற்ற உடல் நலமாம்! உளநலமாம்! குடிநலமாம்! நாட்டு நலமாம்! உலகநலமாம்! **'பற்று வேண்டா என்றவரே, பற்றற்றானைப் பற்று'** என்றனர்.

பற்று இல்லையேல் படிப்பில் தொழிலில் நட்பில் காவலில் உயர்வு உண்டாகுமா? தத்தம் உடலை அறிந்து, வாழ்வியலை அறிந்து பற்றுவனவற்றைப் பற்றுவதை விடுத்தால், தற்கேடு மட்டுமில்லை உலகியல் கேடும் ஆகும் அல்லவா!

தற்பற்று முதற்கண் வேண்டும் என்றால், அது குறுநோக்கா? இல்லை. குற்றமான நோக்கா? இல்லை. தற்பற்றுக் கொண்டு, தன்னை நலத்தால் காக்கவில்லை என்றால், குடும்பத்திற்கு அவர் பாரமாகி விடுவார் அல்லவா!

தம்மை நலமாக வைத்துக் கொள்ளாதவர் - தாமே சுமையாக மாறியவர் பிறரைச் சுமப்பாரா?

தற்பற்றோடு தன் உடலையும் உளத்தையும் உடைமையையும் காத்துக் கொள்ளுதல் உலகநலம் எனக் கொள்ளல் வேண்டும்! தன்னைக் குடிப்பற்றாலும், கேளிக்கைப் பற்றாலும் சூது முதலாம் பற்றாலும் கெடுத்துக் கொள்வார் வீட்டுக்கேடர், நாட்டுக்கேடர், உலகக்கேடர்!

"கெடுவான் கேடு நினைப்பான்" என்பதனினும் முதன்மையாயது கெடுவான் தன்னை நல்வகையால் பேணிக் கொள்ளாதவனாம்! ஆக்கத்திற்கு ஆகும் ஆக்கம், செல்வம்! பொருட்செல்வம்!

அவ்வாக்கத்தால் அறங்காக்கலாம்! பிறர் துயர் தீர்க்கலாம்! பிறர் ஆக்கம் பெற உதவலாம்! ஆனால், அவ்வாக்கத்தால் தன்னைக் கெடுத்து - தன் குடியைக் கெடுத்து கெடு வாழ்வன் ஆனால், ஆக்கப் பெருக்கம் தீயிற் தீயாம் தீயாகி விடும் அல்லவா!

துன்பம் பெருகப் பெருக உயிர்ப்பற்றுமை மிகுதியாம்.

நோய் வாட்ட வாட்ட உயிர் வேட்கை மிகுதியாம். அவ்வாறே, இழக்க இழக்கப் பற்றுமை மிகுவது - காதலாகுவது ஏன் அதுவே உயிராகுவது எது? அது சூது.

"இழத்தொறும் காதலிக்கும் சூதேபோல் துன்பம்

உழத்தொறும் காதற் றுயிர்"

என்பது வள்ளுவம். காதற்று: காதலை பெரு வேட்கையை உடையது சூது. "சூதும் வாதும் வேதனை செய்யும்" வேதனை செய்யச் செய்ய, விட்டொழிக்குமா? விடாமல் தொடரவே செய்யும்! விடாமல் நிழல் போல் தொடர்வதைப் பற்றாகக் கொள்ளல் நற்பற்றா? அற்பற்றா?

அழிவு செய்யும் - செய்தே தீரும் பற்றைப் பற்றுவதற்கும் தன்னை எரிக்கும் தழலைத் தானே தலைமேல் எண்ணெய் விட்டுப் பற்ற வைத்துக் கொள்வதற்கும் என்ன வேறுபாடு? பற்றுக்குறடு, பற்றிய இரும்பைத் தீக்குள்ளும் விடாமல் பற்றும்!

பற்றாசு என்பது இரண்டு இரும்புகளை ஒட்டிச் சேர்க்க ஊடேயிருந்து வெந்துருகி இரண்டையும் ஒன்றாக்கித் தானும் ஒன்றாகி நிற்கும். அவ்வாறு பற்றுக் குறடு போலவும் பற்றாசு போலவும் இறுக்கிப் பற்றியதும் புலப்படாமல் ஒன்றாகி விடு!

"சிக்கெனப் பிடித்தேன்" என்பதை மறவாமல் பற்றி நில்! பிடித்த இறுக்கப் பிடியிலேயே உன் வெற்றி உனக்கே புலப்பட்டு விடும்! பற்றுவது எதை? பற்றுவது எவரை? என்பதைத் தொடர்வோம்.

❖❖❖

# 3. பற்றுவது எதை? எவரை?

அம்பு ஏவப் பார்க்கிறான். “வில்லை எடுத்தேன்; அம்பை விடுத்தேன்.” எனச் செயல்படுவதில்லை.

அம்பைக் கூராக்குகிறான்; வில்லைச் சீராக வளைக்கிறான். நாணை இறுக்கிக் கட்டுகிறான். அம்பை எதன்மேல் ஏவ வேண்டுமோ அதைச் செவ்வையாகக் குறி வைக்கிறான். அதனைப் பயில்வதற்கு இலையைத் தேர்ந்தான். இலையில் கண்ட இலக்கு பின்னே விரிந்தது. இலக்கு இயம் இலக்கு அணம், என மொழியியல், வாழ்வு வழியியல் குறிக்கோள்களைக் கூறும் நூல்களுக்கு ஆயிற்று. இலக்கு ஆகிய ‘குறி’ நூற்பெயரும் ஆயிற்று.

இலக்கு ஒருவனை ஒருமுகப்படுத்தும். ஐம்புலங்களும் ஒன்றி நிற்கச் செய்யும்.

இலக்கு இல்லையேல் சிதறும்; ஒரு நோக்குப்படாது. இலக்கு உயர்வுடையது. குறி பார்த்து இலக்குப் பார்த்து அம்பு, கல் முதலியவை ஏவுதலை உச்சுதல் என்பர்.

உச்சினார் பார்! அப்படியே வீழ்த்திவிட்டார் என்பர். ஆதலால் குறிக் கொண்டு நோக்கும், அந்நோக்கில் தக்காராகத் தோன்றுபவரைச் சிக்கெனப் பற்றிக் கொண்டால், அவர் கொண்ட வெற்றியும், அவர்க்கு மேல் வெற்றியும் பெறலாம்!

தக்க பெரியவரைப் பற்றுதல் வேண்டும். தக்க பெரியவர் தாமே வெளிப்படார். புகழும் வேண்டாப் புகழர் அவர். விளம்பர உலகால் அறியப்படாதவர் அவர். போலியர் போல் பரப்பாளரோ பரப்புதலோ கொள்ளாதவர் அவர். பற்றிப் பெறுவார் பெற வேண்டும். எல்லாமும்

பற்றிப் பெறுவார் உளரா எனத் தேடி அலையார். அவ்வாறு தம்மைத் தேடிவருவார் வந்து பெறும் பயனைத் தம் பயனாகக் கொள்வரேயன்றி, அவரால் பயன் பெறவேண்டும் என்றும் கருதாதவர்.

கடல் எங்கோ இருக்கிறது. கலம் எங்கோ வருகிறது. கலங்கரை விளக்கோ எங்கோ இருக்கிறது. அதன் ஒளி, சுழற்சி, சுழற்சி அளவு ஆயவை கொண்டு கடலோடிகள் அவ்விடம் எவ்விடம் என அறிகின்றனர். அதனைக் காண விரும்புவார்க்குக் **'கலங்கரை விளக்கு'** என்னும் பழஞ்சொல்லின் பொருள் இதுவேயாம். கரையில் நிற்பதால் மட்டும் 'கரை' எனப்பட்டது இல்லை. கரைதல் அழைத்தல். காக்கை கரைந்து அழைப்பதில்லையா? அப்படிக் கரைக்கண் இருந்து அழைத்ததாலும் பெற்ற பெயர் அதுவாம். கலங்கரை விளக்கம் கடலோடிகளுக்குப் பேருதவியாகும். அதுபோலவே காந்த முள்ளும் தேவையாம். காந்தமுள் திசைமாறாமல் செல்ல உதவும். கலங்கரை விளக்கம் சேரவேண்டும் இடத்தைக் காட்டித் தெளிவிக்கும்.

இவ்வாறே தக்க சான்றோர் உறவாகக் கிடைத்தால் தடம் மாறாமல் காப்பார்; நிலைமாறிச் செல்லாமலும் உதவுவார்.

பெரியவர் எவர் என்றும் அடையாளம் காட்டுகிறார் திருவள்ளுவர்.

"செயற்கு அரிய செய்வார் பெரியர்" என்பது.

பிறர் செய்தற்கு அரியவற்றைச் செய்பவரே பெரியர் என்பது; எளியவர் செயலன்று.

பழக்கத்தால் ஓடல் இயக்கம் அன்னவை அன்று. செய் என்பதோ செம்மைப் பொருளதாம். செம்மையான உலகநலம் கருதிய உயிர்நலம் கருதிய செயலாக இருக்கவேண்டும் என்பதாம்.

"உள்ளத்தால் உள்ளலும் தீதே, பிறன் பொருளை"

"இன்னாச் சொல் நோற்பாரின் பின்"

"பிறிதின் நோய் தன்நோய் போற்றல்"

"இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்தல்"

"இயல்புளிக் கோலோச்சல்"

- இன்னபல உயர்நிலைப் பண்புகளாம்!

சொல்லும் சொல் தீயாய் இருக்கும்போதும், தண்ணிய பனி நீராகக் கொண்டு சினம் சீற்றம் இல்லாராய் இருப்பது பிறர்க்கு எளிய செயலா?

சிலுவையில் தாம் அறையப்படும் போதும் - அத்தீமை செய்வாரை நோக்கி "இன்னது என அறியாது செய்கிறார்கள்; இறைவனே இவர்களைப் பொறுத்தருளும்" என்று வேண்ட எவர்க்கு வரும்?

அப்படிப் பற்றினார் அவரைப் போல் எனின்,

தேடி ஏன் அலையவேண்டும்!

தேடிவந்த திருவாக வாய்ந்த அவரைப் பற்றினால்,

அவரைப் பற்றினாரை ஏன் தேடவேண்டும்?

அவரையே பற்றலாமே! **எடுத்துக் காட்டானவரை விடுத்து**

**அடுத்தவர்களைத் தேடி அலைவானேன்?**

அவ்வாறானால் சமயம் சார்ந்த தாகாதா?

அங்கே **கொள்கை** அன்றிச் **சமயம்** எனச் சொன்னால்,

கிறித்துவர் எவரையும் பற்ற முடியுமே!

முடியுமா?

**கொள்கையுடையாரைச் சமயமாக்கி விட்டதால், சமயம் சார்ந்தவரெல்லாம் கொள்கையர் ஆவார் என்பது பொய்ம்மை; ஏமாற்று.**

**வள்ளுவம் - வள்ளலார் - கற்றார், வள்ளுவர் வள்ளலார் ஆகி விட்டனரா?**

தாயுமானம் கற்றவர் தாயுமானவர் ஆயினரா?

புத்தர் சமயம் சார்ந்தார் புத்தரொப்பார் என்றால், கொலை வெறி விலங்கும் உயிர் வாழ்வதற்காக மட்டுமே ஊனுண்ண உயிரிகளைச் கொல்லும்!

வெறி கொண்டு ஈழத்தமிழரை ஒட்டு மொத்தமாக அழிக்கும் மாக்கொடும் விலங்காக - உலகக்கேடன் இட்லரினும் எட்டு மடங்குக் கேடனான - இராசபட்சே தோன்றியிருப்பானா? அவன் செய்ய, எல்லா ஏந்தும் தந்து இந்தியக் கயமை கெடுத்திருக்குமா?

பற்றுவது கொள்கையை!

பற்ற வேண்டியது கொள்கையரை!

எதற்குப் பற்றுவது எனத் தொடர்வோம்.

❖❖❖

# 4. பற்றுவது எதற்காக?

"எங்கே போகிறீர்கள்? ஏன் போகிறீர்கள்?" என்றால் மிக எளிமையாகச் 'சும்மா' என்று மறுமொழி கூறுகின்றனர்.

'சும்மா' இருத்தல் எளிதன்று! சும்மா இருத்தல் அரிது! என்பது மெய்யுணர்வின் மேம்பட்டார் உரை. எதற்கெடுத்தாலும் 'சும்மா' என்னும் சொல் தமிழ் வழக்கில் உண்டாகிவிட்டது.

"என்ன பேசுகிறீர்கள்?" 'சும்மா தான் பேசுகிறோம்' என்பது பொருளறியாச் சொல்லாகி விட்டது. எதற்குப் பற்றுவது என்பதற்கும் சும்மாவா மறுமொழி?

எதற்கும் ஒரு நோக்கு வேண்டும்! நோக்காவது நோக்கம்! தம் நல்வாழ்வு கருதியும், பிறர்க்கு நலமாக்குதல் கருதியும் பற்றுதல் நோக்கம் அமையவேண்டும்!

தம் நல்வாழ்வு நோக்கு என்பதும், பின்னே பின்னே பிறர் நலத்திற்காகத் தாம் நலமாக வாழ்தல் வேண்டும் என்னும் எண்ணமாகச் சிறந்தோங்கி விடும்!

ஒருவர் தாம் நலமாக இல்லாக்கால் பிறர்க்குச் சுமையாகி விடுதல் கண்கூடு. அந்நிலையில் அவர் பிறர்நலம் நாடுவரா? தாம் நலமாக வளமாக இருந்தால் பிறர்க்கு உதவமுடியுமே! அந்நிலை நமக்கு இல்லையேல் பிறர்க்கு உதவமுடியாதே என்னும் ஏக்கம் உண்டானால் தம் நலமும், தம் நலத்திலேயே பிறர் நலமும் அடங்கி ஒன்றாகத் திகழக் காணலாம்!

நல்ல இல்லறத்தான் தனக்கெனச் சமைப்பது இல்லை; பிறர்க்கு உதவித் தானும் உண்ணவே சமைப்பான் என்பது தமிழ முந்தையர் நெறி.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் (தாய், தந்தை, தாரம்) துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும், தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் என்னும் பதின்மர்க்கும் வாய்த்த வகையால் உதவி அதன்பின் தானும் உண்பான் என்பது இல்வாழ்க்கை முதல் மூன்று குறள்களின் பொழிப்பு.

"வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்பது பின்னை நூற்செய்தி.

"உயர்ந்தோர்க்குத் தமக்கென வறுமைத்துயர் இல்லை; பிறர்க்கு உதவமுடியாத நிலை உண்டாகியிருக்குமானால் அதுவே அவர்க்கு வறுமையாகி விடும்" என்பதும் வள்ளுவம்.

**"பாடிவரு புலவன் பரிசில் இன்றி மீள்தல்**
**நாடு இழந்ததனினும் நனிஇன் னாததுஎன**
**வாள் தந்தனனே தலைஎனக் கீய"**

எனக் குமணவள்ளல் நிலையைச் சங்கச் சான்றோர் பாடிய புறப் பாடலை நோக்கின் இவ்வுண்மை தெளிவாம்!

**குடிதாங்கி** என ஒருவள்ளல் பிற்காலத்தே வாழ்ந்தான்! அவன் பெயர் சொல்வதென்ன?

அவன் முடிதாங்கி ஆட்சி செய்தவன் அல்லன்!

அடிதாங்கிக் கிடந்த அடிமை நிலையனும் அல்லன்!

தம் ஊரவர் தமக்கெல்லாம் உள்ளூர்ப் பழுத்த பழமரமாக இருந்தவன். பண்ணன் என்பான் சிறுகுடி வேளாளன்! உழைத்த மக்களைப் போற்றினான்! உழைக்க முடியா நிலையினர்க்கும் உதவி வாழ்ந்தான்! அரசு செய்யவேண்டிய கடமையை அவன் செய்தமையை அறிந்தான். அந்நாள் ஆட்சிபுரிந்த சோழமன்னன் **கிள்ளிவளவன்.**

தான் ஒரு பாணனாக அவன் சிறுகுடி தேடிச் செல்வதாய்,

"பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே"

என எதிர்ப்பட்டாரிடம் வினவுவதாகப் பாடியுள்ளான்.

பண்ணன், சிறுகுடி உழவன்!

சோழன், பெருநில வேந்தன்!

எதற்குப் பற்றினான் பண்ணனை?

ஊருக்கும் உறவுக்கும் உதவி வாழ்தல் நாட்டுக்கும்

உலகுக்கும் நலப்பணி என்று உட்கொண்டதால் பற்றினான்!

பாடிப் பரிசு பெறவா பற்றினான்,

வள்ளல் கிள்ளிவளவன்?

"பெரியாரைத் துணைக்கோடல்" என்றோர் அதிகாரம் வகுத்தார் வள்ளுவர். ஏன் வகுத்தார்? பெரியார் என்பார், பிறரால் செய்தற்கு அரியவற்றையும் இயல்பாகச் செய்ய வல்லார்! அவரைப் பற்றினால் அருவித் தூவல் அடுத்து வருவார்க் கெல்லாம் தண்மை கொழிப்பது போல அடுத்து வந்தார்க் கெல்லாம் அவர்தம் இயன்மையும் செயன்மையும் இயல்பாக வாய்க்கும் என்பதற்காகவே! தக்க ஒருவர் தனித்திருப்பதனினும் தம்மொத்த தமக்கு மேம்பட்ட தக்கோரை ஒன்றி இருத்தல் தம் தகுதியை மேலும் உயர்த்துதற்கும், தம் தகுதி எந்நிலையிலும் தாழ்ந்து படாமல் இருப்பதற்கும் ஏணிபோலவும், காப்பரணம் போலவும் நலமாம் என்பதால், "சான்றோர் சான்றோர் பாலர் ஆப" என்றார் சங்கச் சான்றோர் ஒருவர்.

அவர்தம் கருத்தை, "பொன்னும் பவழமும் முத்தும் மணியும் ஓரிடத்தா கிடைக்கின்றன. வெவ்வேறிடத்து வெவ்வேறு முயற்சியில் கைவரப் பெற்று ஒருமாலையாகத் தொடுக்கும் போது ஒன்றற்கு ஒன்று அழகூட்டுவதாய், பெருமை சேர்ப்பதாய் அமைவது போலச் சான்றோர்கள் சான்றோர்களைச் சார்ந்து ஆக்கநலம் புரிவார்கள்" என்றார்.

❖❖❖

# 5. பற்றுவதால் பயனென்ன?

பற்றுவதால் பயன் பற்றுவாரைப் பொறுத்தது!

பற்றுவது சொல்லுக்கா, பெருமைக்கா, கூலிக்கா, சுரண்டுதற்கா என்பவற்றை யெல்லாம் பொறுத்தது.

நல்ல கருத்துகளை - தமக்குப் பயனாம் கருத்துகளைப் பற்றிக் கொண்டு, அவற்றைப் பிறர்க்கு உரைக்கப் பற்றுவது மேடைக் கவர்ச்சியால் ஏற்படுவது!

நல்ல கருத்துகளைக் கேட்டு அவற்றைத் தாம் பதிவு செய்து நூலாக்குவது தம் படைப்பாற்றலையும் கருத்துப் பரப்புதலையும், பற்றியவரொடு தம்மை இணைத்துக் கொள்ளலையும் கருதியது.

நல்ல கருத்துகளைக் கேட்டுத் தாம் நடைப்படுத்துதற்கு ஆக்கிக் கொண்டு நலப்பேறு தாம் உறுவது. நல்ல கருத்துகளைக் கேட்டு, அக்கருத்துகளே தம்வாழ்வுத் தொண்டாகவும் கடப்பாடாகவும் கொண்டு அவரையே சார்ந்து அல்லது அவர் நிறுவனத்தையே அவரொடும் இணைந்து வளர்த்தும், அவருக்குப் பின்னர் அவர் வழிஞராய் அவரினும் மேம்பட வளர்ப்பதும் வாழ்வாகி நிற்கப் பற்றுவது எனப் பல்வகையவாம்.

இவற்றுள் முன்னையவற்றினும் பின்னையதே பற்றுதல் பயனும் பேறும் எனல் சாலும்.

இனிப் பற்றுதல் பற்றப்படுவாரைப் பொறுத்ததுவாம். பற்றப்படுவார் பொழிவாளரா, எழுத்தாளரா, தொண்டரா, அருளரா, எளிமை தனிமை கனிவு பிறவி நோக்குணர்வு, தம் ஈடேற்றம், தம் ஈடேற்றம் போல் பிறரும் ஈடேற்றி உயர்த்துதல் பயன், அவர்கள் - பிறர் - பெறும் நலமே தாம் பெற்ற நலமாகக் கொள்ளல் என்று இருப்பாரை - வாழ்வாரைக் கண்டு பற்றிக் காலமெல்லாம் அவர் வழியே அவ்வழியாக

இருத்தலை உறுதிப்படுத்திக் கொண்டு தம்மை அவருக்கு முழுதுற ஒப்படைப்புச் செய்து அவராகி ஒன்றிய நிலையைக் கொள்ளல்.

ஒருகாலத்தளவு, ஓர் இடத்தளவு, ஒரு செயலளவு என அமையாமல் தாமே அவரே என இரண்டற்ற ஒருநிலையில் ஒன்றி நின்று பணியாற்றி அப்பணியால் வரும் பேறுகள் அனைத்தையும் அவர்க்கே ஒப்படைத்து, அவ்வொப்படைப்புச் செய்தார், தாம் என்னும் எண்ணமும் அறவே துடைத்து நிற்கும் தனிப்பேறாம் இறைத் தொண்டு நிலை அது.

இறைத்தொண்டு என்பது எங்கும் இருப்பதாய், எவற்றையும் இயக்குவதாய், எல்லாவற்றுக்கும் மூலமும் முதலும் ஆனதாய், வழிவழியாக அந்நிலை அகன்றுவிடாமல் பெருகி நலம் பாலிப்பதாய் அமைந்ததேயாம்! அத்தொண்டு, நடமாடக் கோயில் தொண்டாம்.

படமாடக் கோயில் தொண்டு மல்க மல்க, நடமாடக் கோயில் தொண்டு ஒல்கி ஒல்கி ஒழிந்துவரல் கண்கூடு.

தமிழ்நாடு, 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என்னும் கொள்கையது. இஃது இடைக்காலத்துத் தோன்றி, வரவரப் பெருகி முழுதுறு போலிமைச் சடங்காகிப் பாழ்பட்ட நிலையைப் பலவகையாலும் பெருக்கிக் கொண்டு வருகிறது!

**அயல்மொழி வழிபாட்டை என்று ஏற்றதோ அன்று முதல் கோயில் ஒழுங்கு சீர் கெட்டது.** புரியாமொழியில், புரியாதார் ஓதிப், புரிபுரியாய்ப் பொருந்தாப் புனைவுகளை ஆக்கி, புரிந்த தமிழரும் அவர்க்கு மயங்கி - மயக்கப்பட்டுக் கிடந்து அவர் உருட்டித் தந்த நூல்வடத்தைத் தேர்வடமாய்ப் பெருக்கிப் புராணப் பொய்ம்மையே இறைமையாய்ப் போக்கடித்த காலம் பிற்காலம்!

தொல்பழநாள் முழுமுதல் இறை இலங்க வழிபாடோ, அதனை அடுத்த நாளில் இருந்த மாயோன், சேயோன், வேந்தன், வண்ணன், கொற்றவை, வேலன் என்பார் வழிபாடோ இல்லாமல் தொன்ம (புராண) வழித் தெய்வங்கள் பெருகிவிட்ட நிலை!

தொல்காப்பியர் கடவுள் வாழ்த்து வேறு, தெய்வ வழிபாடு வேறு என்று தெளிவுறக் காட்டுகிறார். கடவுள் பிறவா இறவா முழுமுதல்! **தெய்வம் மாந்தனால் உண்டாக்கப்பட்டது** என்பது அவர் முடிபு.

முப்பொருளைக் கூறும் அவர் முதற்பொருள் கூறி, அடுத்துக் கூறும் கருப்பொருளில் தெய்வம் என்பதை முதற்கண் வைக்கிறார்.

தெய்வம், உணாவே, மா, மரம், செய்தி, யாழ் எனக் கூறுகிறார். முதற்பொருளாம் காலம் இடம் வழியாகத் தோற்ற முற்றவை இவை என்கிறார்.

மாந்தன் சொல்லோவியம் மனத்தே தீட்டுகிறான். அதை வண்ண ஓவியன் சுவரிலோ துணியிலோ வண்ணங்களால் அச்சொல்லோவியம் கொண்டு தீட்டுகிறான். சிற்பம் வல்லான் கல்லிலும் மாழை (உலகம்) வகைகளிலும் வடிக்கிறான்! நினைத்தது, பாட்டாகப் பாடியது, ஓவியமாகத் தீட்டியது, சிற்பமாக வடித்தது எல்லாம் மாந்தன் உளத்துக் கருக்கொண்ட பொருள்கள் தாமே!

அவ்வடிவங்களைத் தனித்தனி வைத்துத் தனித்தனி அருச்சகரை வைத்து, தனித்தனி வழிபட வைத்தது இறைமை சார்ந்ததா? இறைமைப் பெயரால் மாந்தர் - அறிவறிந்த மூளையர் - தாமும் தம்மினமும் தட்டில்லாமல் வாழச் செய்த ஏற்பாடா?

மண்ணகம் விண்ணகம் சென்று ஆயவல்ல அறிவனும் இக்கண்மூடி வழக்கிற்குக் கட்டுண்டு கிடக்கிறான் என்பதைக் கண்கூடாகக் காண்கிறோமே. சிந்தனையற்ற பிறவிகளா அவை; இல்லை! சீரழிப்புக்குத் துணைபோகும் பொது நலம் போற்றாப் பிறவிகளாம்.

வள்ளுவர் பொதுமையறம் காட்டினார்; மாந்தப் பிறப்புப் பொதுமை, கல்விப் பொதுமை, ஒப்புரவு வாழ்வுப் பொதுமை, ஈகைப் பொதுமை, பால்பொதுமை, புகழ்ப்பொதுமை எனக் காட்டினார்! வள்ளலார் ஆன்மநேய வடிவராக, சாதி, மத, சமய, சடங்குச் சழக்கு அற்ற, பொதுமை யறமே அறம் - அந்தண்மை - 'சன்மார்க்கம்' என வாழ்ந்து காட்டினார்; வாழவழியும் காட்டினார்! மணியடித்தல், இசைக்கருவி முழக்கம் முதலியவை தவிர்த்தார்!

முழுமுதல் இறைமை எண்ணத்தையே ஒழிக்கச் சடங்கு மதமாகி விட்டார் - ஆக்கி விட்டார் - விடுவரா?

போலிச் சடங்குகளே வழிபாடு ஆகிச் செக்குச் சுற்றலாய், தேங்காய் பழத்தட்டாய், தட்டில் காசாய், உண்டியலாய் சமயம் ஒடுங்கிப் போய்க் கிடக்கின்றது.

கி. பி. ஆறாம் நூற்றாண்டு சமய மறுமலர்ச்சிக் காலமாய்க் கிளர்ந்தது. அவர்களுக்கு முன்னரே ஆழ்வார்கள் சிலர், திருமூலர், காரைக்கால் அம்மையார், மணிவாசகர் முதலோர் தோன்றி விட்டனர். மூவர் முதலிகள் திருக்கோயில் தோறும் அடியார் கூட்டத்துடன் சேர்ந்து முழுமுதல் இறையைப் பாடினர்! பரவினர்! மண்ணின் நெறியொடு சடங்கு நெறியும் அவர்கள் காலத்தில் புகுந்தது. அத்தகைய நிலையையும் வேதியம் ஒப்பாமல் தள்ளுகடையாக்கித் தானே ஆள்வோர், செல்வர் துணையால் முழுதுறப் பற்றிக் கொண்டு இறைமைக்கு மூடுவிழாச் செய்து போலிச் சடங்கே ஆக்கிவிட்டது. அதனால் மூவர் முதலிகளும் பின்னவர்களும் முழுமுதல் இறைபற்றிப் பாடிய பாடல்களும் அவ்வக் கோயிலுள்ளும் படியேறாத் தீண்டாப் பாடல்களாய் ஆக்கப்பட்டுவிட்டன. அதற்கு எதிர்ப்புக் காட்டவேண்டிய சைவமடங்களும், தம் பெயரை மெய்ப்பிக்கும் வகையில் வேதியவழியே வழி என ஒத்தூதித் திளைக்கின்றன! எதிர்ப்பார் எவரேனும் கிளர்ந்தால் வேதியம் அமைந்தாலும் தமிழச் சைவமடங்கள் தறிகெட்டு நின்று தடுக்கவே முந்துகின்றன! இந்நிலையில் எண்ண வேண்டியது ஒன்று உண்டு.

இம்மண்ணின் வடக்கே வேதியம் தோன்று முன்னரே தோன்றியது சமணமும் புத்தமும்! அச்சமயம் வழிபாடு செய்வது எப்படி?

பின்னர் வெளிநாட்டில் இருந்து வந்தவை இசுலாம், கிறித்தவம்; அதன் பின்னர்க் கிளர்ந்தது சீக்கிய சமயம். இவற்றின் வழிபாட்டு முறைமை மடங்களும் அறநிலையத் துறையும், தமிழ் மக்களும்

கண்ணெடுத்துப் பார்க்கவும் இல்லையே! ஏன்? ஆரிய மயக்கமா? வேதிய வேள்விச் சூழ்ச்சியா?

குளிர்நாட்டில் எரிவேள்வியூட்டி அக்குளிரைப் போக்கிக் கொண்டு வழிபட ஏற்பட்ட வழிபாடு, சுட்டெரிக்கும் தமிழக வழிபாடாக ஆகிவிட்டதும், சைவம் ஏற்றுக் கொண்டு தானும் வேதியத் துணையாய் நிற்பதும் தகவா?

கிறித்தவன் விவிலியம் கொண்டு வழிபாட்டு நிலையம் செல்கின்றானே!

இசுலாமியன் திருக்குரானைக் கொண்டு தன் வழிபாட்டு நிலையத்திற்குச் செல்கிறானே!

சீக்கியன் கிரந்தசாகிபை இறைமையாகக் கொண்டு வழிபாடு புரிகின்றானே!

திரிபிடகம் தம்மபதம் திருவழிபாட்டுக்கு உரியவையாகத் திகழ்கின்றனவே!

தமிழனுக்கு மட்டும் தேங்காய் பழம் சூடம் பற்றி வழிபாட்டுப் பொருளா?

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்புகழ், திருவருட்பா, திருவாய்மொழியை ஏந்தாதா தமிழன் கை? தமிழா நீ, எப்பொழுது இவற்றை ஏந்தப் போகிறாய்?

அப்பொழுதே உனக்கு முழுமுதலைப் பற்றும் பற்றுதல் பேறுகிட்டும்! அப்பொழுதே வீடும் வேண்டா விறலனாய் விளங்கும் தொண்டனாய் முழுமுதல்வன் அருளுக்கு உரியவன் ஆகத் திகழ்வாய்!

'தொண்டலால் துணையும் இல்லை

ஐயன் ஐயாற னார்க்கே'

என்பது தொண்டர் பெருமான் நாவுக்கரசர் நல்லுரை.

❖❖❖

# 6. பற்றுதல் பயன் முழுதுறும் வீடுபேறே!

வீடுபேறு என்பது என்ன?

இறந்தபின்னர் அடையக் கூடியதா? இருக்கும்போதே அடைவதா? இறந்தபின்னர் அடைவதை எவர் கண்டார்? எவரும் அறியா ஒன்றை நம்பிக் கொண்டிருப்பதா மெய்யுணர்வு?

திருக்குறளில் '**நீத்தார் பெருமை**' என ஓர் அதிகாரம் உண்டே! அந்நீத்தார் இறந்தவரா?

'நீத்தார் கடன் செய்தல்' திதி கொடுத்தல் என ஏய்ப்பரும் **மேய்ப்பரும்** சொல்லிக் காசு பறிப்புக் கழகம் காலமெல்லாம் நடத்திப் பிழைக்கிறார்களே! இறந்தபின் வீடுபேறு என்றால், எவர்வழி அல்லது எதன்வழி அவர்களுக்கு விடுகிறார்கள்? உடலை இங்கே புதைக்கவோ எரிக்கவோ ஆயபின்னர் அவர்கள் இவ்வாறு இவ்வடிவில் இருப்பார்களா?

நீத்தார் கடன் அல்லது திதி நடத்துபவர் அங்கிருந்து, அவர்கள் விடுக்க இங்கே வந்தவர்களா?

ஆண்டுதோறும் 'திதி' நடத்தினால் அவர்கள் வீடுபேறு அடைந்தார்கள் என்பது வேடிக்கை இல்லையா?

நினைவுநாள் என்பது நமக்குரியதே அன்றித் தரகு **வேலை** செய்பவர்க்கு உரியதா?

நாம்நம் முன்னவர்களை நினைப்பது நம் நன்றிக் கடனாகச் செய்வதே! அதனாலும் அவர்களுக்கு ஆவதொன்றும் இல்லை! முன்னவர்கள் இல்லையேல் நாம் ஏது, நாம் அடையும் பேறுகள் எவை? என நன்றி உணர்வுடன் நினைவுநாள் நடத்துகிறோம்! அதுவும்

உள்குதலாக இருக்கவேண்டுமேயன்றி, படையல் சடங்கு என ஆகிவிடக் கூடாது!

வாழும் நாளிலேயே பின்வருவார்க்கெல்லாம் ஆக்கமாம் செயலும் பண்பும் அறிவும் திறமும் கொண்டு வாழ்ந்து, தம்நலம், தம்புகழ், தம்சார்பு என வாழாமல் பிறர்க்கென முழுதுறத் தம்மை ஒப்படைத்து வாழும் வாழ்வே வீடுபேற்று வாழ்வாம்!

"வாழும் போதே வீடுபேறு பெறாதவன்

வீழ்ந்த பின்னரா பெறுவான்?"

என்பதை எண்ணினால் தெளிவு பிறக்கும். அதற்கு மூடுதிரை போடுவதே முறையெனக் கண்டவரும் கொண்டவரும் தெளிவு பெறுவாரா?

பூத உடல் நமக்குள்ளது; ஐம்பூதங்களின் கூட்டுச் சேர்க்கையே உலகம் ஆவது போல் அப்பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் அமைந்ததே உடல்; இது பொய்யுடல் அன்று; மெய்யுடல்; தான் அழிந்தாலும் அழியா உடலுக்கு புகழுடலுக்கு மூலமாவது அதுவே. ஆதலால், இதுவே மெய்யுடலாம். இவ்வுடல் உள்ளபோதே தற்பற்றற்ற ஒழுக்கத்தராய் - தூயராய் - வாழ்வாரே நீத்தார்.

நீத்தார் ஆக்கமாவது இது, கேடாவது இது என்னும் இருமையும் தெளிந்தவர்.

அறிவு எனப்படும் அரிய வழிகாட்டியால் ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் தம் கட்டமைவுள் நீங்காமல் வைத்திருப்பவர்; எத்திறவோரும் எமக்கு மேம்பட்டவர் அவர் என்ன எண்ணத்தக்கவர்; குணம் என்னும் மலையாகத் திகழ்பவர். தம் உயிர்க்கும் மேம்படப் பிற உயிர்களை மதித்துப் போற்றுபவர்; எள்ளத்தனைத் தீமையும் செய்யாத சீரிய அருள் வாழ்வர்! இவரே நீத்தார் எனப்படுபவர்.

சுட்டப்பட்ட தன்மைகள் உடையவராய் வாழ்பவர் எவரோ அவரே வீடு பேற்றாளர் அல்லது நீத்தார்!

தாம் 'நீத்தார்' என்னும் பெருமிதம் உடையவரா அவர்? இல்லை! **நீத்தார் என்று பாராட்டும் சொல்லைக் கேட்டலையும் நீத்தார் அவர்!**

அவர்க்கு அவர் விரும்பாமலே வள்ளுவர் வழங்கும் ஒரு விருது, **"வேண்டாமைப் பூண் கொண்ட விழுச் செல்வர்"** என்பது.

அச்செல்வம் பெற அவாவியவரா (விரும்பியவரா) அவர்? அவர் விரும்பியிருந்தால் அச்செல்வர் ஆகமாட்டாரே! அவர் கொண்டதா அது?

அன்று! அன்று!

அவர் வாழ்நிலை கண்டு மற்றவர் வழங்கியதை அன்றி அவர் கொண்டது இல்லையே!

அவர் வேண்டாமை என்னும் விழுச் செல்வம் கொண்டதால் உலகுக்கு என்ன பயன்?

உலகம் அடையும் நற்பேறுகள் அனைத்தும் அவர் வேண்டாமைச் செல்வராய் விளங்குவதால் தானே வாய்த்தன! அவரே 'முதலை வாயராய்' இருந்திருப்பின் உலக முழுமையையும் ஓரே விழுங்காக விழுங்கியிருப்பாரே!

**"பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுவின்றேல்,**

**மண்புக்கு மாய்வது மன்"**

என்னும் குறள்மணி ஒளி செய்வதற்கு மூலவராய் அவர் இருப்பதால் தான், புறநானூற்றுப் பாவலன் ஒருவன் இக்குறளுக்கு விளக்கமாக ஓரகவல் பாடினான். எடுக்கும் போதே, "உண்டாலம்ம இவ்வுலகம்" என்னும் பூரிப்புறுகிறானே! அப்பாடல்:

**உண்டால் அம்ம இவ்வுலகம்! இந்திரர்**

**அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்**

**தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்.**

துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்
அன்னமாட்சி அனையர் ஆகித்
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!**

❖❖❖

"சாவா அமுதே கிடைத்தாலும் தாமே உண்ணார்
வெறுப்பிலர் உறக்கமும் மிகக் கொள்ளார்; புகழ்
வருதாயின் உயிரும் கொடுப்பர்; பழி
வருவதாயின் உலகையே தந்தாலும் அதனைச்
செய்யார்; சோர்வுறவும்மாட்டார்;
சொல்லிய படியே செயலாற்றும்
சீரமையர்; தமக்கென எந்த முயற்சியும்
செய்யாமல், பிறர்க்கெனவே எல்லா
முயற்சியும் செய்வர்; இத்தகையர்
உலகில் வாழ்வதாலேயே உலகம்
வாழும் உலகமாக உள்ளது"

என்பது இதன் பொருள்.

# 7. பேரா இயற்கைப் பேறு

வீடு என்பது விடுதலை; விடுதலை அடைந்த இடம்; விடுதலை அடைந்த நிலை.

வெளியுலகில் இருந்து விடுதலை அடைந்த இடம் வீடு. இவ்வீடு, விடுதலைப் பயிற்சி நிலையம்.

பற்றுதலுடன் வாழ்வைத் தொடங்கிப் படிப்படியே பற்றுதல் அற்று முழுதுறு விடுதலைப் பேறு பெறுவதற்கு வாய்ந்த உயிர் நிலையம்.

அன்பில் தொடங்கும் வீட்டு வாழ்வு; தன்மேல் கொண்ட பற்று, தன் துணைமேல் கொண்ட பற்றாக விரிவுறும். அவ்விரிவு மக்கள் மேல் கொண்ட பற்றாக மேலும் விரியும். தன்னை மறந்து 'தாம் மறந்து 'தம்'மாய் அமைவது அது. 'தம் மக்கள்' எனப்பெருகும்.

தம் மக்கள் மேல் கொண்ட பற்றுமை மக்களுக்குக் கொடுத்தார் - கொண்டார் என்பார் பற்றாய்ச் சிறக்கும்.

மக்கள் பற்றுமை, அவர் மக்கள் பற்றுமையாய் ஓங்கும். உற்றார் உறவு - கேளிர் கிளைஞர் அன்பர் நண்பர் அறிவர், அறவர், அருளர், துறவர் என்பார் பற்றாய் மேன்மேல் சிறக்கும்.

பொன்னும் மணியும் பவழமும் வயிரமும் ஒன்றியிணைந்த சால்பராய் வாழவகை காட்டும்.

உலகில் வாழ்ந்து கொண்டே உலகியலில் ஒட்டாது, உலகையும் வெறாது விடாது நிற்க வைக்கும். இந்நிலை கலங்கரை விளக்கநிலை! பிறர்க்கு வழிகாட்டி - ஒளி நெறி காட்டி - உயர்த்தும் நிலை இது!

தம்மைச் சார்ந்தார்க்கு அவர், தாம் பெற்ற பேற்றைப் பெறச் செய்யும் தூண்டல் நிலையாய்த் திகழும்!

வனம் செல்ல வேண்டா! வளம் துறக்க வேண்டா!

பட்டுணி கிடக்க வேண்டா! மூச்சை - பேச்சை - அடக்க - ஒடுக்க - வேண்டா! வீட்டைத் துறவாமலே வீடு பெற்ற பெருநிலை இஃதாம்!

எந்த இயற்கை அல்லது ஊழ் படிப்படியே ஊற்றுணர்வு, நாவுணர்வு, மூக்குணர்வு, கண்ணுணர்வு, செவியுணர்வு, மனவுணர்வு எனத் தந்ததோ, அந்த இயற்கை படிப்படியாய் ஒவ்வொன்றாய்க் குறைத்து ஒடுக்கும். அவ்வொடுக்கப் பேறு இயற்கையே அருள்வது.

படிப்படியே அகவை முதிர்வால் பொறி புலன் அடங்கப் பெற்றார் அனைவரும் 'ஒடுங்கி' ஆகார். ஆலிலை பாலற்றுப் பழுத்து உதிர்வது போல்வது அது!

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழ்ந்து, தாம் பெற்ற பேற்றைத் தம் இயல்பாலேயே பிறரும் அறிந்து பற்றிக் கொள்ளத் தக்கோராய் வாழ்ந்து, தம்மை நேரிடைக் காணாரும் காணவும் பற்றிக் கொண்டு உய்யவும் வழிகாட்டியாம் பதிவுகளை ஆக்கினாரே ஒடுங்கியராம்.

அவர் முடிநிலை, **நறுமணமலர் ஒன்று அரும்பி முகைத்து மலர்ந்து காம்பு கழன்று கொடியின் காலடியில் உதிர்வது போல உதிர்வதாம் நிலையாம்!**

அத் தகையரை இறையராய்க் கொண்டு ஒடுங்கிய நிலையிலேயே, நிலத்துள் குழித்த குழியுள் இருத்திக் கற்படுக்கையாய்ச் செய்து, அவ்விடத்தே **'இலங்கம்'** நாட்டி வழிபாடு செய்தல் வழக்காம். அந்நிலையே 'தோற்றிய திதியே ஒடுங்கி' எனவும், 'பேரா இயற்கைப் பெருநிலை' எனவும் கூறப்படும் தெய்வநிலையாம்!

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

என்னும் நிலையாம். அடக்கம் செய்தல், புதைத்தல் முதலாயவற்றுக்கும் ஒடுக்கநிலைக்கும் வேறுபாடு பெரிதாம்.

ஒடுங்கி நிலையே, உற்றார் உறவினர் என்பது இல்லாமல், ஊரவர் நாட்டவர் என்பார் வழிபாட்டு நிலைக்கு உயர்த்தும் உயர்வுடையதாய்ப் பெருகுவதாம்.

பின்னே வருவார் அவரைச் சார்ந்தார். அவர் வழியே அறிந்தார் அனைவரும் அவர் பிறந்தநாள் அறியார் எனினும் அவர் ஒடுங்கிய நாள் அறிந்து அந்நாளில் விழாக் கோலம் கொள்வர்; அவர் புகழ் என்றும் விளங்கும் வகையில் ஒடுக்கம் கோயில் அமைவும் சுற்றுச் சுவரும் கோபுர அமைப்பும் செய்வர். அடுத்தே கிணறு பூந்தோட்டம் நித்தல் வழிபாடு எனவும் உண்டாக்குவர். ‘குருபூசை’ எனப் பக்கத்து ஊராரும் பங்கு கொள்வர்.

நாள் கடந்த நிலையில் பலப்பலர் வாயிலும் அவர் புகழும் இயலும் செயலும் பேசப்படும். உரையும் பாட்டுமாய் நூலும் கிளரும். அவ்வூரார் எவ்வூர் வாழ்வினராய் வாழ்ந்தாலும் அவ்வூர் ஒடுக்கக் கோயில் விழாவை மறவாராய் அவணுற்றுத் தம் உறவில் தளிர்ப்பர்.

அந்நிலையில், சித்தர் எனவும் அறிவர் எனவும் முனிவர் எனவும் குலதெய்வம் எனவும் கொள்ளப்பட்டுக் கொடையும் நிலபுலமும் உடையதாய் ஒடுக்கம் ஓங்கும். அவ்வொடுக்கம் ஊர் வறியவர்க்கும் வழிச் செல்வார்க்கும் தங்கல் இடமாய் ஊணகமாய்க் குளம் தெப்பக்குளம் - திருத்தேர் என அமைத்தும் பள்ளி, மருத்துவமனை எனத் தொண்டு நிறுவனமாகிச் சிறக்கவும் செய்யும். அந்நிலையில் வழிநிலை அடியார்களும், அறங்காவல் கட்டளையரும் நடாத்தவும் ஒடுங்கியவர் முதலாக எண்ணப்பட்டு இத்தனாம் பட்டம் என வரிசையுறும்; மூத்த பட்டம் இருக்கும் போதே இளையபட்டம் உருவாக்கித் தொடரவும், தொண்டர் கூட்டம் வழிவழி வரவும் சிறக்கும்.

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

❖❖❖



அருகதாசு - தமிழ்நன்மதி தம் மகன்களுடன்

அன்பில் தொடங்கும் வீட்டு வாழ்வு; தன்மேல் கொண்ட பற்று, தன் துணைமேல் கொண்ட பற்றாக விரிவுறும். அவ்விரிவு மக்கள் மேல் கொண்ட பற்றாக மேலும் விரியும். தன்னை மறந்து தாம் மறந்து தம்மாய் அமைவது அது. தம் மக்கள் எனப்பெருகும்.

தம் மக்கள் மேல் கொண்ட பற்றுமை மக்களுக்குக் கொடுத்தார் கொண்டார் என்பார் பற்றாய்ச் சிறக்கும்.

Print @ The Printing House, Try-23. Ph : 2420121